**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**

**DINDIGUL.**

**S.C. 40/2024**

**Prosecution Witness : 2**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | **திரு. பாஸ்கரன்** | **Caste** | : | |
| **Father's Name** | : | **திரு. சுப்பன்** | **Calling** | : | |
| **Village** | : | **பழனிபட்டி, நத்தம்** | **Religion** | : | **இந்து** |
| **Taluk** | : | **திண்டுக்கல்** | **Age** | : | **55** |
| | | | **Dated** | : | **03.04.2025** |

**இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது**

---

**Accused present. Both side counsels present.**

அ.சா. 2 (பட்டியல் சாட்சி 5), திரு. **பாஸ்கரன்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்பட்டார்.

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து காட்டு வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியும். அசா. 1 ஐ தெரியும். அவர்கள் இருவரும் என் உறவுக்காரர்கள். சுமார் 6 அல்லது 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் அடைக்கனூர் அருகில் உள்ள என்னுடைய தோட்டத்தில் வேலை செய்து கொண்டு இருந்தேன். அப்பொழுது மதியம் சுமார் 12.00 மணி அளவில் எங்கள் ஊரில் விசேசம் நடந்து கொண்டு இருந்து, அவர்கள் தகவல் கொடுத்தார்கள். ஆஜர் எதிரி இறந்துபோன சரிதா மற்றும் நந்தினி ஆகியோரை தன்னுடைய இரு சக்கர வாகனத்தில் ஓட்டிச் சென்று அடைக்கனூர் என்ற இடத்தில் பஸ் எதிராக வரும்போது அதற்காக சைடு வாங்கிய போது நிலை தடுமாறி இரு சக்கர வாகனத்தோடு மேற்படி மூவரும் பள்ளத்தில் விழுந்ததால் இந்த விபத்து ஏற்பட்டதாகவும்,

**அதில் ஆஜர் எதிரி உட்பட மூவருக்கும் காயமாகி இருந்ததாகவும், அதனால் அவர்களை நத்தம் அரசு மருத்தவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்து இருப்பதாகவும் சொன்னார்கள். சம்பவ இடத்திலேயே காயம்பட்ட சரிதா இறந்துவிட்டதாக சொன்னார்கள். நான் அடைக்கனூர் சென்று இறந்துபோன சரிதாவின் பிரேதத்தை பார்த்தேன். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.**

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:–</u>**

**நான் சம்பவத்தை கேள்விப்பட்டு தான் வந்தேன். சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை. நான் சொன்னது போல சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், இழப்பீடு பெற வேண்டும் என்பதற்காகவும், வழக்கின் எதிரி என் உறவினர் என்பதாலும், உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.**

R KANAGARAJ Digitally signed by R KANAGARAJ Date: 2025.04.03 18:53:11 +0530